**In the Court of the Principal District Munsif, Padmanabhapuram.**

E.P.No.2/2020 தேதி-15.04.2026

(R.W.1) - சுசீலா

**முதல் விசாரணை -**

இந்த மனுவில் உள்ள 3 வது எதிர்மனுதாரர் ராஜமணி என்பவர் மனுச் சொத்தை ஜெனிகுமாரி என்பவருக்கு கிரயம் கொடுப்பதற்கு முன்பாகவே இந்நீதிமன்ற அசல் வழக்கு எண்.27/2015 ல் இடைக்கால மனு எண்.140/2015 ல் மனுச் சொத்தில் அசல் ஆவணங்களுடன் ஒரு பிணைப்பு பத்திரம் நீதிமன்றத்தில் ஏற்படுத்திக் கொடுத்திருந்தார். மேற்படி ஆவணத்தை தற்போது என் தரப்பாக ஆவணமாக குறியீடு செய்ய வேண்டுகிறேன். மேற்படி ஆவணம் எ.ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுகிறேன்.

**மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை -**

இந்த கோரிக்கை மனுவில் 3 வது மனுதாரர் ராஜமணி என் கணவர் என்றால் சரிதான். இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள பிணைப்பு பத்திரம் என் கணவருக்கு எதிராக நான் தாக்கல் செய்த ஜீவனாம்ச வழக்கில் என் கணவரால் வழங்கப்பட்ட பிணைப்பு பத்திரம் என்றால் சரிதான். அந்த வழக்கில் இம்மனுவின் கோரிக்கை மனுதாரரான ஜெனிகுமாரியை தரப்பினராக சேர்க்கப்படவில்லை என்றால் சரிதான். மேற்சொன்ன பிணைப்பு பத்திரம் ஏற்படுத்திக் கொடுக்கும் முன்னரே என் கணவர் மேற்சொன்ன ஜெனிகுமாரிக்கு விலை ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொடுத்தார் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது.

எனக்கு மேற்சொன்ன விலை ஒப்பந்ததை பற்றி தெரியும் என்றாலும், நானும் என் கணவரும் மேற்சொன்ன ஜெனிகுமாரியை ஏமாற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மேற்சொன்ன பிணைப்பு பத்திரத்தை பற்றி கோரிக்கை மனுதாரரான ஜெனிகுமாரிக்கு எந்த தகவலும் தெரியாது என்றால் சரியல்ல. நான் ஜெனிகுமாரிக்கு எதிராக தாக்கல் செய்த அசல் வழக்கு எண்.151/2016 என்ற தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் நினைவில்

இல்லை. நானும், 3 வது எதிர்மனுதாரான ராஜமணியும் சேர்ந்து கோரிக்கை மனுதாரரான ஜெனிகுமாரியை ஏமாற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மேற்சொன்ன பிணைப்பு பத்திரம் பற்றி ஜெனிகுமாரிக்கு தெரியாததால் பிணைப்பு பத்திரம் கோரிக்கை மனுதாரரை எவ்விதத்திலும் கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல.